தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
மயிலாடுதுறை

முன்னிலை :– திருமதி. எஸ். தமிழ்செல்வி, B.A.,L.L.M.,Dip., in (J.J & J.P).,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
மயிலாடுதுறை.

அ.சா.1 நாள் 07.10.2025

| | | | |
|---|---|---|---|
| SC. No. | 37/2025 | | |
| பெயர் | ரவி | த/பெ. | வைத்தியநாதசாமி |
| வயது | 58 | தொழில் | விவசாயம் |
| கிராமம் | வைத்தியநாதபுரம் | தாலுக்கா | சீர்காழி |

**(மற்ற எதிரிகள் ஆஜர், 8ம் எதிரி ஆஜர் இல்லை. பி.என்.எஸ்.எஸ். சட்டப்பிரிவு 355–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டது).**

சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டது.

முதல் விசாரணை :–

நான் தற்போது வைத்தியநாதபுரம், கொண்டத்தூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் அனைவரும் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள். எதிரிகள் அனைவரும் எனக்கு தெரியும். கடந்த 2024ம் வருடம் சித்திரை 1ம் தேதி அம்பேத்கர் பிறந்தநாளை ஒட்டி வைத்திருந்த பேனரை யாரோ கிழித்துவிட்டார்கள். இது குறித்து போலீசாரிடம் புகாரும் கொடுத்துள்ளார்கள். 20ம் தேதி இரவு 7.45 மணியளவில் எங்கள் வீட்டு முன்பு சத்தமாக இருந்தது. நான் வீட்டுக்குள் இருந்து வெளியே வந்து பார்த்தபோது யாரும் வெளியே இல்லை. என்வீட்டு முன்பு சத்தம்போட்டது சம்மந்தமாக வைத்தீஸ்வரன் கோவில் போலீசாரிடம் புகார் கொடுத்தேன். புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது கிடையாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சி எனக்கூறி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அனுமதி வழங்கப்பட்டது.

CJM, MAYILADUTHURAI.

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>

கடந்த 20.04.2024 அன்று இரவு 7.45 மணியளவில் என் வீட்டிற்கு முன்பு எங்கள் தெருவைச்சேர்ந்த ரெங்கநாதன், விஜய், சஞ்சய், விஜய் த/பெ. பன்னீர்செல்வம், பிரகாஷ், தமிழ், மாதவன், விஸ்வநாதன் , ராஜேஷ் மற்றும் குபேந்திரன் ஆகியோர்கள் கூட்டமாக நின்றுக்கொண்டு தெருவில் உள்ள பொது வாட்டர் டேங்கில் எங்கள் தெருவைச்சேர்ந்தவர்கள் துணி துவைத்தால் உங்களுக்கு என்னடா என்று அபாசமான வார்த்தைகளால் பேசி கூச்சலிட்டார்கள் என்றால் சரியல்ல. நான் வந்து பார்த்தபோது யாருமில்லை. நானும், ராஜேந்திரன், செல்வமுருகன் மற்றும் தெருவில் உள்ளவர்கள் மேற்படி நபர்கள் பார்த்து இங்கு வந்து ஏன் சத்தம்போடுகிறீர்கள் என்று கேட்டதற்கு எதிரிகள் அசிங்கமான திட்டி, கையில் வைத்திருந்த சறுக்கு பாட்டிலை என்மீது தூக்கி வீசினார்கள் என்றால் சரியல்ல. மேற்படி எதிரிகள் கையில் வைத்திருந்த கருங்கல்லை என் வீட்டு மீதும், எங்கள் மீதும் அடித்தார்கள் என்றும், மேலும் கையில் வைத்திருந்த கட்டை கழியால் எங்களை தாக்கினார்கள் என்றால் சரியல்ல. போலீசார் என்னை விசாரித்தபோது எதிரிகள் அசிங்கமாக திட்டி, பாட்டில் மற்றும் கருங்கல்லால் தாக்கியதையும், கட்டை கழியால் தாக்கியதையும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் ஊர்க்காரர்கள் என்பதால் உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. புகாரில் உள்ள கையொப்பத்தை வேண்டுமென்றே தன்னுடையது அல்ல என்று எதிரிகளுக்கு ஆதரவாக தற்போது உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-</u>

இல்லை என முறையீடு செய்யப்பட்டது.

<u>மறு விசாரணை</u> :-

இல்லை.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காண்பித்து அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

7/10/25

தலைமை குற்றவியல் நீதிபதி,
மயிலாடுதுறை.

CJM, MAYILADUTHURAI.

தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
மயிலாடுதுறை

முன்னிலை :– திருமதி. எஸ். தமிழ்செல்வி, B.A.,L.L.M.,Dip., in (J.J & J.P).,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
மயிலாடுதுறை.

அ.சா.2 நாள் 07.10.2025

| | | | |
|---|---|---|---|
| SC. No. | 37/2025 | | |
| பெயர் | ராஜேந்திரன் | த/பெ. | வைத்தியநாதசாமி |
| வயது | 59 | தொழில் | விவசாயம் |
| கிராமம் | வைத்தியநாதபுரம் | தாலுக்கா | சீர்காழி |

**(மற்ற எதிரிகள் ஆஜர், 8ம் எதிரி ஆஜர் இல்லை. பி.என்.எஸ்.எஸ். சட்டப்பிரிவு 355–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டது).**

சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டது.

முதல் விசாரணை :–

நான் வைத்தியநாதபுரத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ரவி எனது தம்பி. ஆஜர் எதிரிகள் அனைவரும் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள். எதிரிகள் அனைவரும் எனக்கு தெரியும். எனக்கு இவ்வழக்கு குறித்து எந்த விபரமும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சி எனக்கூறி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அனுமதி வழங்கப்பட்டது.

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :–

கடந்த 20.04.2024 அன்று இரவு 7.45 மணியளவில் என் தம்பி வீட்டிற்கு முன்பு எங்கள் தெருவைச்சேர்ந்த ரெங்கநாதன், விஜய், சஞ்சய், விஜய் த/பெ. பன்னீர்செல்வம், பிரகாஷ், தமிழ், மாதவன், விஸ்வநாதன் , ராஜேஷ் மற்றும் குபேந்திரன் ஆகியோர்கள் கூட்டமாக நின்றுக்கொண்டு தெருவில் உள்ள பொது வாட்டர் டேங்க்கில் எங்கள் தெருவைச்சேர்ந்தவர்கள் துணி துவைத்தால் உங்களுக்கு என்னடா என்று

CJM, MAYILADUTHURAI.

அபாசமான வார்த்தைகளால் பேசி கூச்சலிட்டார்கள் என்றால் சரியல்ல. நானும், ரவி, செல்வமுருகன் மற்றும் தெருவில் உள்ளவர்கள் மேற்படி நபர்கள் பார்த்து இங்கு வந்து ஏன் சத்தம்போடுகிறீர்கள் என்று கேட்டதற்கு எதிரிகள் அசிங்கமான திட்டி, கையில் வைத்திருந்த சறுக்கு பாட்டிலை என்மீது தூக்கி வீசினார்கள் என்றால் சரியல்ல. மேற்படி எதிரிகள் கையில் வைத்திருந்த கருங்கல்லை என் வீட்டு மீதும், எங்கள் மீதும் அடித்தார்கள் என்றும், மேலும் கையில் வைத்திருந்த கட்டை கழியால் எங்களை தாக்கினார்கள் என்றால் சரியல்ல. போலீசார் என்னை விசாரித்தபோது எதிரிகள் அசிங்கமாக திட்டி, பாட்டில் மற்றும் கருங்கல்லால் தாக்கியதையும், கட்டை கழியால் தாக்கியதையும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் ஊர்க்காரர்கள் என்பதால் உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-</u>

இல்லை என முறையீடு செய்யப்பட்டது.

<u>மறு விசாரணை :-</u>

இல்லை.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காண்பித்து அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

தலைமை குற்றவியல் நீதிபதி,
மயிலாடுதுறை.

தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
மயிலாடுதுறை

முன்னிலை :– திருமதி. எஸ். தமிழ்செல்வி, B.A.,L.L.M.,Dip., in (J.J & J.P).,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
மயிலாடுதுறை.

அ.சா.3 நாள் 07.10.2025

| SC. No. | 37/2025 | | |
|---|---|---|---|
| பெயர் | செல்வகுமார் | த/பெ. | வைத்தியநாதசாமி |
| வயது | 53 | தொழில் | விவசாயம் |
| கிராமம் | வைத்தியநாதபுரம் | தாலுக்கா | சீர்காழி |

**(மற்ற எதிரிகள் ஆஜர், 8ம் எதிரி ஆஜர் இல்லை. பி.என்.எஸ்.எஸ். சட்டப்பிரிவு 355–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டது).**

சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டது.

முதல் விசாரணை :–

நான் வைத்தியநாதபுரத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ரவி மற்றும் அ.சா.2 ராஜேந்திரன் எனது அண்ணன்கள். ஆஜர் எதிரிகள் அனைவரும் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள். எதிரிகள் அனைவரும் எனக்கு தெரியும். எனக்கு இவ்வழக்கு குறித்து எந்த விபரமும் தெரியாது.

போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சி எனக்கூறி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அனுமதி வழங்கப்பட்டது.

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :–

கடந்த 20.04.2024 அன்று இரவு 7.45 மணியளவில் என் அண்ணன் வீட்டிற்கு முன்பு எங்கள் தெருவைச்சேர்ந்த ரெங்கநாதன், விஜய், சஞ்சய், விஜய் த/பெ. பன்னீர்செல்வம், பிரகாஷ், தமிழ், மாதவன், விஸ்வநாதன் , ராஜேஷ் மற்றும் குபேந்திரன் ஆகியோர்கள் கூட்டமாக நின்றுக்கொண்டு தெருவில் உள்ள பொது வாட்டர் டேங்க்கில் எங்கள்

CJM, MAYILADUTHURAI.

தெருவைச்சேர்ந்தவர்கள் துணி துவைத்தால் உங்களுக்கு என்னடா என்று அபாசமான வார்த்தைகளால் பேசி கூச்சலிட்டார்கள் என்றால் சரியல்ல. நானும், ரவி, ராஜேந்திரன் மற்றும் தெருவில் உள்ளவர்கள் மேற்படி நபர்கள் பார்த்து இங்கு வந்து ஏன் சத்தம்போடுகிறீர்கள் என்று கேட்டதற்கு எதிரிகள் அசிங்கமான திட்டி, கையில் வைத்திருந்த சறுக்கு பாட்டிலை என்மீது தூக்கி வீசினார்கள் என்றால் சரியல்ல. மேற்படி எதிரிகள் கையில் வைத்திருந்த கருங்கல்லை என் வீட்டு மீதும், எங்கள் மீதும் அடித்தார்கள் என்றும், மேலும் கையில் வைத்திருந்த கட்டை கழியால் எங்களை தாக்கினார்கள் என்றால் சரியல்ல. போலீசார் என்னை விசாரித்தபோது எதிரிகள் அசிங்கமாக திட்டி, பாட்டில் மற்றும் கருங்கல்லால் தாக்கியதையும், கட்டை கழியால் தாக்கியதையும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் ஊர்க்காரர்கள் என்பதால் உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> :-

இல்லை என முறையீடு செய்யப்பட்டது.

<u>மறு விசாரணை</u> :-

இல்லை.

V.S.C[signature]

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காண்பித்து அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

[signature]

தலைமை குற்றவியல் நீதிபதி,
மயிலாடுதுறை.

7/10/25

[signature]

CJM, MAYILADUTHURAI.